भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU 15/04/2025 EX 160700

பதிவாளர் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சை

P. சர்புதீன்

TAMIL UNIVERSITY, THANJAVUR – 613010

Department of Industries and Earth Sciences

தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர் - 613010

தொழில் மற்றும் நில அறிவியல் துறை

மற்றும்

Kunthavai Naacchiyaar Government Arts College for Women (A)

Thanjavr - 07, Department of Geography,

குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
புவியியல் துறை, தஞ்சாவூர் - 613 007.

## புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU)

2025-ஆம் வருடம் பிப்ரவரி மாதம் ஆம் தேதி தஞ்சாவூர், தமிழ்ப் பல்லைக்கழகம், பதிவாளர் (தனக்காகவும், பல்கலைக் கழகத்திற்காகவும்) 1-வது நபர்

மற்றும்

குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் (தனக்காகவும், கல்லூரிக்காவும்) 2-வது நபர்

பதிவாளர் (பொ)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 010.

24/02/2025
முதல்வர்,
குந்தவை நாச்சியார் அரசினர்
மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
தஞ்சாவூர்–613 007.

ஆகிய இருவரும் சேர்ந்து எழுதி ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்.

நம்மில் 1-வது நபருக்கு (தொழில் மற்றும் நில அறிவியல் துறை) வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், அதுபோல் நம்மில் 2-வது நபருக்கு (குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர் – 07, புவியியல் துறை) வழங்கப்பட்ட கல்லூரி நிர்வாகக்குழு தீர்மானத்தின்படி, இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு நபர்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டு அதில் மேற்படி இரு நபர்களும் கையொப்பம் இடுகின்றனர்.

நம்மில் 1-வது நபரான தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கும், 2-வது நபரான குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர் – 07, புவியியல் துறைக்கும் இடையே கல்வி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகள், மாணவர்களுக்கான பணிப்பயிற்சி திட்டம் மற்றும் மாணவர் - ஆசிரியர் ஆராய்ச்சி ஒருங்கிணைந்து ஆய்வு செய்துகொள்வது தொடர்பாகப் புரிந்துணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இப்பயிற்சி ஐந்து வருடங்கள் மட்டும் இணைந்து நடத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப் பெறுகிறது. (பிப்ரவரி 2025 முதல் பிப்ரவரி 2030 வரை).

வரையறுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட காலத்தில் இரு துறைகளில் ஆய்வக்களங்களில் பரஸ்பர ஒத்துழைப்பை நல்கி, இரு நபர்களை சார்தோர் பயன்பெறும் வகையில் பொதுநலன் கருதி இந்த கீழ்கண்ட ஷரத்துக்கள் ஏற்படுத்தப்படுகிறது.

தமிழ்ப் பல்கலைக்கழக தொழில் மற்றும் நில அறிவியல் துறை மற்றும் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர் – 07, புவியியல் துறை இணைந்து இரு துறைகளுக்கும் பொதுவான ஆய்வுக்கான நில அறிவியல் துறை பணிகளை பின்வருமாறு மேற்கொள்ளுதல்.

- பல்வேறு நிதி நிறுவனங்களுடைய நிதி நல்கைக்கான ஆய்வுத்திட்ட கருத்துருக்கள் மற்றும் பயிலரங்க கருத்துக்கள் இணைந்து தயார்செய்து அனுப்புதல் ஆய்வுத்திட்டம் இணைந்து மேற்கொள்ளுதல்.
- சிறப்பு சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்குகள் அறிவியல் சார்ந்த விரிவாக்க பணிகள் மற்றும் Popular Lecture Series, அறிவியல் சார்ந்த பொருட்காட்சிகள், கட்டுரை போட்டி, கவிதை போட்டி, ஓவியப்போட்டி போன்றவற்றை தற்போதைய அறிவியல் போக்குகளுக்கேற்ப இரு நிறுவனங்களும் இணைந்து திட்டமிடல்.

24/02/2025
முதல்வர்,
குந்தவை நாச்சியார் அரசினர்
மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
தஞ்சாவூர்–613 007.

24/02/2025
பதிவாளர் [பொ]
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 010

- மாணவர்களின் அறிவுத்திறனையும், புரிதலையும் மிகுதிப்படுத்திக்கொள்ளும் விதமாக, ஆசிரியர்கள் தங்களது கல்வி, ஆய்வுத்திட்டம் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டும் தங்களின் திறன்களை மேம்படுத்தியும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் உதவி செய்தல்.
- மாணவர்களின் வேலைக்கான பணிப்பயிற்சிகான பட்டறைகள் நடத்துதல் தொடர்பாக இரு துறைகளும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கற்பித்தல்.
- மாணவர்களுக்கு TNPSC Free Coaching Class கொடுப்பதும் மற்றும் UPSC SLET/NET Coaching Class கொடுப்பது.
- 'Competitive Exam' தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
- இரண்டு துறைகளும், ஒன்று சேர்ந்து பெரிய ஆய்வுத்திட்டங்களை கூட்டாக மாநில மற்றும் மத்திய நிதி நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க ஏதுவாக செயல்படுதல்.
- தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு எவ்வித நிதி சுமையின்றி இவ்வொப்பந்தம் மேற்கொள்ளப்படுகிறது.

மற்றும்

- Extension activities like Water Day, World Earth Day மற்றும் World Science Day ஆகியவை சேர்ந்து நடத்துவதற்கும் இந்த MOU உதவுதல்.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் செயல்பாடுகள், அது தொடர்பான கூட்டங்கள், இரு நிறுவனங்களின் தலைவர்களையும், அவர்கள் சார்பில் நியமிக்கபெறும் ஆசிரியர்களையும் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களையும், சார்ந்தவையாகும். இரு நபர்களும் தனித்தனியே ஆவணப்படுத்திக்கொள்ள இரு நபர்களும் கூறிக்கொள்கின்றனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்புதல் குறித்து ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும் குறிப்பிட்ட கால இடையில் செயல்பாடுகள் நிறுத்திக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டால் மூன்று மாதம் முன்னதாக எழுத்து முறையில் இரு நபர்களும் அறிவிப்பு அனுப்பி இவ்வொப்பந்தம் நீக்கப்பெற இரு நபர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரு நபர்களும் வணிக நோக்கில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. இரு நிறுவனங்களின் பெயர்களை மட்டுமே கூட்டாக மேற்கண்ட ஒப்பந்த காலங்களில் இருவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

24/02/2025

பதிவாளர் (பொ)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 010

24/02/2025

முதல்வர்,
குந்தவை நாச்சியார் அரசினர்
மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),
தஞ்சாவூர்–613 007.

ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்கள் நடத்தத் திட்டமிடும் ஒவ்வொரு நிகழ்வுகள், கருத்தரங்குகள், கருதரங்க முன்மொழிவுகள், அழைப்பிதழ்கள் முதலான அனைத்து ஏற்பாடுகளும் விரிவான, வெளிப்படையான, முறையான கலந்தாய்வுகளின் மூலமாகச் செய்து கொள்ள வேண்டும்.

இரு நிறுவனங்களும் தீர்மானத்த செயல்பாடுகளைச் செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கையாக வெளியிடும்போது, இருவரும் எழுத்து வடிவில் கூட்டாக வெளியிட வேண்டும்.

இரு நிறுவனங்களுக்கிடையே எழுத்து வடிவிலான ஆவண வடிவிலான முன்வரைவுகள் இரு நிறுவனங்களும் நன்கு சோதித்தப் பின்னரே பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும்.

இதன்படி சம்மதித்து அடியிற்கண்ட சாட்சிகள் முன்இரு நபர்களும் இன்று தஞ்சாவரில் கையொப்பம் இடுகின்றனர்.

24/02/2025

பதிவாளர்
தமிழ்ப் பல்லைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

KUNTHAVAI NAACCHIYAAR GOVT. ARTS COLLEGE FOR WOMEN (A), THANJAVUR 613 007.

24/02/2025

முதல்வர்
குந்தவை நாச்சியார்
அரசினர் மகளிர்
கலைகல்லூரி - தஞ்சாவூர்

**முதல்வர்,**
**குந்தவை நாச்சியார் அரசினர்**
**மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),**
**தஞ்சாவூர்-613 007.**

**சாட்சிகள்:**

1. க. அன்பரசு பேராசிரியர் தலைமையாசிரியர் (பொ)

2. 24/02/2025
இரா. நீலகண்டன் த/பெ. அ. இராமசாமி
பேராசிரியர் (ம) தலைவர்,
தொழில் (ம) நில அறிவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

1. 24/2/2025
Dr. K. Banu Kumar
S/O S. Karunakaran
HOD of Geography
KNGAC, Thanjavur - 7

2. 24/2/2025
Dr. S. Sreekala
Associate Professor of Geography